

2055
வைகாசி
மாத
இதழ்

# திறவுகோல்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள் – 8

## என்னையே எனக்குக் கண்டுபிடித்துத் தந்த அந்த மூவருள் ஒருவர்!

என்னைப் பொறுத்தவரை பிள்ளைகளின் படிப்புக்குக் கொடுப்பதை விட ஒழுக்கத்திற்கு தான் அதிகம் முக்கியத்துவம் தருவது பிடிக்கும். பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி வரும் நான், ஒவ்வொரு கல்வியாண்டிலும் புதிய வகுப்பில் எதிர்கொள்ளும் மாணவர்களிடம் இரண்டு உறுதிமொழி கட்டாயம் எடுத்துக்கொள்ளச் செய்வது என் வழக்கம்.

அதாவது, முதலாவது எதை முன்னிட்டும் பொய் பேச முயற்சி செய்யக் கூடாது. அடுத்ததாக, பிறர் பொருளைத் தெரியாமல் எடுத்து வைத்து மறைத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில், குழந்தைகள் மிகவும் நல்லவர்கள். தவறான மனிதர்களும் மோசமான சூழலும் தாம் அவர்களை நெறிபிறழ வைக்கும்.

சில பொழுதுகளில் ஏற்படும் அசாதாரண சந்தர்ப்பங்கள் அவர்களது நடத்தையில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. இஃது என் அசைக்க முடியாதக் கருத்தாகும்.

இத்தகைய சூழ்நிலையில், நான் வகுப்பாசிரியராக இருக்கும் எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகள் கல்வியாண்டின் இறுதியில் பள்ளிக்கான நினைவுப்பரிசுடன் கூடிய பிரியாவிடை நிகழ்வைச் சிறப்புடன் கொண்டாட அன்றாடம் தமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியைத் தம் சொந்த செலவிற்கும் மற்றொரு பகுதியைத் தம் சேமிப்பிற்கும் பிறிதொன்றை மேற்குறிப்பிட்ட நிகழ்விற்கும் செலவழிப்பது குறிப்பிடத்தக்கது.

குறைவான மாணவ மாணவியரே ஆனாலும், இந்த தன்னார்வ சேமிப்பில் மாணவிகள் தாம் அதிகம் பங்களித்து வந்தனர் என்று சொல்லலாம். மாணவர்கள் கடைசியில் தம் பங்கு மொத்தத்தையும் அளித்து விடுவதாகக் கூறிக்கொண்டு இதுகுறித்து எந்தவொரு கவலையும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருந்தனர்.

இந்த இடத்தில் ஒன்றை நான் தெளிவுபடுத்தியாக வேண்டும். இந்த நிகழ்விற்காக நான் மாணவர்களை ஒருபோதும் ஊக்கப்படுத்துவதில்லை. அதேவேளையில், பள்ளி மீதான, தமக்குக் கற்றுத்தந்த ஆசிரியர்கள் மீதான நன்றியுணர்ச்சியைக் காட்டும் அவர்களது தன்னார்வ செய்கைக்கு இடையூறாக இருக்கவும் நான் விரும்புவதில்லை. எல்லா செடிகளும் பூ பூக்கட்டும் என்பது எனது கருத்து.

இந்த வளரும் சேமிப்பில் அவ்வப்போது பணத்தைப் போட என் வசமுள்ள மைசை சாவியை வலிந்து பெற்று மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கும் அதற்குரிய பணப்பையில் இடுவதும் கையாள்வதும் முக்கியமாக ஒரு சிறுமியின் பணியாகும். அவள் வராத பட்சத்தில் அதைக் கையாள ஒரு சிறுவனும் அவனுக்குத் துணையாக ஒருவனும் என மொத்தம் மூவர் மட்டுமே

அப்பணியில் ஈடுபடுவார்கள். இதுவும் மாணவர்களால் எடுக்கப்பட்ட முடிவுதான்!

கடந்த மார்ச் மாதத்தில் ஒருநாள்...

"சார்! மணி பர்சைக் காணோம்!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பதற்றத்துடன் எப்போதும் அதைக் கையாளும் சிறுமிதான் முதலில் ஓடிவந்து வகுப்பறைக்குள் நுழைந்ததும் முதல் வேலையாகப் பற்றி வைத்தாள். வகுப்பு முழுவதும் ஐயையோ என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வாட்டத்துடன் தம் கவலையைக் கேள்வியாக்கி உட்கார்ந்திருந்தது.

எல்லா கண்களும் என்னையே உற்றுநோக்கிக் குடைந்து கொண்டிருந்தன. எனக்கு என்ன செய்வதென்றும் சொல்வதென்றும் தெரியவில்லை. குழம்பினேன். முதல் பாடவேளை வழக்கம்போல் இனிதாகக் கழியும் என்று நினைத்து ஆசையாசையாக வந்தால் இப்படி ஆகிவிட்டதே என்கிற கவலை ரேகைகள் முகம் முழுவதும் படரத் தொடங்கிவிட்டன.

"ஏய்! எல்லாரும் நல்லா தேடிப் பார்த்தீங்களா?..."

முடுக்கினேன் வேகமாக.

"நல்லா பார்த்தாச்சு சார்! வேணும்னா நீங்களே பாருங்க!"

பதிலுக்கு என்னைத் தேடச் சொன்னார்கள். எரிச்சலும் விரக்தியும் மேலோங்க.

நான் தரையில் சம்மணம் கட்டி உட்கார்ந்து கொண்டு இண்டு இடுக்கு எங்கும் துலாவிப் பார்த்தேன். ஒன்றும் தட்டுப்படவில்லை. நான் வைத்திருக்கும் கற்பித்தல் சார்ந்த பொருள்கள் எல்லாவற்றையும் மீண்டும் வெளியில் எடுத்து வைத்து சல்லடையாய் சலித்துப் பார்த்ததில் பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது.

கைக்கெட்டும் தொலைவில் தான் அந்த பணப்பை இருந்தது நன்றாக நினைவில் இருக்கிறது. அதற்கு இவ்வளவு மெடக்கெடல் தேவையில்லை. ஆனாலும் ஒரு நப்பாசை. எப்படியாவது கிடைத்துவிடாதா என்று!

வகுப்பறை ஓரத்திலிருந்த பழுதான இரும்பு அலமாரியிலிருந்து அநாதையாகக் கிடந்த காணாமல் போன பணப்பையைத் தேடிக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில் இதில் சம்பந்தப்படாத மாணவன் ஒருவன் துள்ளி ஓடிவந்தான்.

அது திறந்து கிடந்தது. உள்ளே எதுவுமில்லை. காலியாக என்னைப் பார்த்துக் கேலியாகப் பல்லிளித்தது கண்டு எனக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. முகம் பேயறைந்தாற்போல் ஆனது. துக்கம் தொண்டை அடைக்க பாவமாக எல்லோரையும் பார்த்தேன். வகுப்பே தலை கவிழ்ந்து கிடந்தது.

மூன்றாம் மனிதரிடம் ஒன்றுமே தெரியாமல் நிற்கும் மாணவனைக் கண்டு கூட நான்

இவ்வளவு கலவரமும் வருத்தமும் அடைந்ததில்லை. நிமிர்ந்த தலையுடன்தான் அவர்களுக்குப் பதில் கூறியுள்ளேன். அதில் எனக்கு எந்தவொரு குற்றவுணர்ச்சியும் இதுநாள்வரை இருந்ததில்லை.

ஏனெனில், இந்த நொடியில் படிக்காதோர் பலர் பிற்காலத்தில் நன்கு படிக்கக் கூடியவர்களாக, மேதைகளாக, நல்ல திறமைசாலிகளாக, இளம் வியாபாரிகளாக, வளரும் அரசியல்வாதிகளாக ஒளிரும் அதிசயம் கண்கூடாக நானே பல நேரங்களில் கண்டதுண்டு.

ஆனால்... ஆனால்... இது என்னை மிகவும் துன்பப்படுத்தி விட்டது என்றே சொல்ல வேண்டும். இந்த நடத்தைக் கோளாறை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ஓடும் மின்விசிறிக்குக் கீழே அமர்ந்திருக்கும் எனக்குள் வியர்த்துக் கொட்டியது. இதயத்திற்குள் துடித்தது தொலைவில் சுவரில் மாட்டியுள்ள கடிகாரத்தின் காலடி ஓசைகள்.

தலை சுற்றுவது போல் ஓர் உணர்வு. பேச நா எழவில்லை.

"என் வகுப்புப் பிள்ளைகளிடம் இப்படிப்பட்ட ஒழுங்கீனமா?" இதுவரை இப்படியொரு பணம் காணாமல் போகும் நிகழ்வை நான் சமீபத்தில் பல ஆண்டுகளாகவே எதிர்கொண்டது கிடையாது. பலபேர் புலம்பக் கேட்டிருக்கிறேன். வகுப்பறையில் காசு பறிகொடுத்த துயரக் கதை பலவற்றை. அது மாதிரியான சமயத்தில் நான் நெஞ்சு நிமிர்த்தி நடந்தது உண்டு. கர்வத்துடன் சொல்லவும் செய்திருக்கிறேன்.

'எம் பிள்ளைகள் ஒழுங்காகப் படிக்காமல் கூட இருப்பார்கள். ஆனால், ஒருபோதும் திருட்டில் மட்டும் ஈடுபடவே மாட்டார்கள்.'

அப்படித்தான் எனக்குக் கிடைத்த மாணவக் கண்மணிகள் இருந்திருக்கிறார்கள். அது நான் செய்த பெரும் புண்ணியம்.

ஒரு நரகத்தில் இருப்பது போன்ற ஓர் உணர்வு இப்போது. இப்படியொரு நெருக்கடியை எதிர்கொள்ளாத எனக்கு என்ன செய்வதென்று எளிதில் புரிபடவில்லை. திக்குமுக்காடித் திணறினேன். இது எனக்காக யாரோ ஒருவர் வைத்த தேர்வு. எப்படி சார் இதில் வெற்றி பெறுகிறார் என்று கங்கணம் கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர் ஒரு சிலர். அவர்கள் இதில் சம்பந்தப்படவில்லை என்பதை அவர்களது முகமே எனக்குக் காட்டிக் கொடுத்தது.

"எவ்ளோ இருந்துச்சு! தெரியுமா?"

குரல் பிசிறடித்தது. எப்போதும் உரத்த குரலில் ஊருக்கே கேட்கும் அளவிற்கு பேசும் நான் அன்று பக்கத்தில் இருக்கும் நபருக்குக் கூட கேட்காத வகையில் அவ்வளவு மெதுவாகக் கேட்டேன். புரியாமல் விழித்தனர். சைகையால் விளித்துக் கேட்டேன்.

"ஓ! அதுவா! எறநூறு இருக்கும்"

"ஒனக்குத் தெரியுமா? மொத்தம் அதுல இருந்தது, எறநூறு இல்லே. எறநூத்தி அம்பது!"

"அதுக்கு ஏன் இப்புடி காட்டுக்கத்துக் கத்துறீங்க?!"

வெளியே தெரிந்தால் மானம் போய் விடும் என்று மெல்லிய குரலில் வினவினேன். இது எனக்கு மிகவும் புதிதாக இருந்தது.

"சரி. என்னைப் பொறுத்தவரை பணம் ஒரு பொருட்டல்ல. ஆமாம்தானே?"

"ஆமாம் சார்!"

அளவோடு பதிலளித்தனர். ஆச்சரியமாக இருந்தது.

"ஆனா?..."

"திருடுறதும் பொய் சொல்றதும் உங்களுக்கு சுத்தமா பிடிக்காது!"

"இப்ப என்ன பண்ணலாம்?!"

"ஆமா...இப்ப என்ன பண்ணலாம்!?"

விழி அம்புகள் குத்தீட்டிகளாய் பாய்ந்தன. நானும் தீவிரமாக யோசித்தேன்.

"நம்மைத் தவிர வேறு யாராவது வந்து எடுத்திருக்க முடியுமா?"

அந்த குற்றவாளிக் கூண்டில் முதல் ஆளாக என்னை நானே நிறுத்தி வைத்துக் கொண்டேன். ஏனெனில், சாவி என்னிடமிருந்தது.

"அதுக்கு வாய்ப்பில்ல சார்! ஏன்னா நீங்க இந்த மூணு பேரைத் தவிர வேறு யாரு கிட்டேயும் சாவி தர மாட்டீங்க."

ஒரு மாணவி மிகச் சரியாகச் சொன்னாள். உண்மையும் அதுதான். அந்த மூவரைத் தவிர வேறு யாரிடமும் நான் உரிய சாவியை மறந்தும் தருவதில்லை. என்னே துல்லிய கணிப்பு!

"அப்ப இந்த மூவருடன் சேர்ந்து நாலாவதாக நானும் இந்த குத்தத்திற்குப் பொறுப்பேத்துக் கொள்றேன்!"

இதற்கு அனைவரின் புருவங்களும் ஒருசேர வளைந்தன. நான் அதற்காக வெட்கப்படவில்லை. என் கவனக்குறைவும் அதில் உள்ளதுதானே?

"நான் அதை எடுக்கல. அப்படியே எடுத்திருந்தேன்னா நிச்சயமா உங்ககிட்ட சொல்லியிருப்பேனா? மாட்டேனா?..."

"சொல்லி இருப்பீங்க சார்!"

"இதுல இன்னொன்னு. தப்பு செய்றதுக்கு எவ்ளோ துணிச்சல் நமக்குத் தேவைப்படுதோ அதைவிட அதிகமான தைரியம் செஞ்ச தப்பை நேர்மையா ஒத்துக்கிறதிலேயும் இருக்கு. புரிஞ்சுதா?"

"நாங்க எடுக்கல சார்!"

ஒருசேர கூவினர். நான் மிகவும் குழப்பத்தில் ஆழ்ந்தேன். இது முள்ளில் விழுந்த பட்டுச்சேலை. வேகமாக எடுக்க முடியாது. ஏதேனும் சேதாரம் விளைந்து விடும். மிகவும் எச்சரிக்கையோடும் பொறுப்புணர்வோடும் தான் இதனைக் கையாள வேண்டும் என்று தீர்க்கமாக நான் எனக்குள் முடிவெடுத்துக் கொண்டேன்.

"சரி. நாளைக்குள் சொல்லிடணும். சக பிள்ளைங்க முன்னாடி சொல்ல கூச்சமா இருந்துச்சுன்னா... என்கிட்ட கைபேசியில பேசு! இல்லாட்டி குறுஞ்செய்தி போடு! இது நமக்குள்ளே இருக்கட்டும்!"

சரி என்பது போல் எல்லோரும் தலையசைத்தனர். அன்றைய வகுப்பு நிறைவடைந்தது. ஆனாலும், அன்று முழுவதும் இதுகுறித்து சக ஆசிரியர்களிடமும் வீட்டிற்கு வந்து மற்றவரிடமும் சொல்லி ஆறுதலோ தக்க தீர்வோ கேட்க முடியவில்லை. திருடனுக்குத் தேள் கொட்டிய கதையாக வலியில் துடித்துக் கிடந்தேன். பொழுது ஒரு பெரும் குழப்பமாக விடிந்தது. யாரும் இதுவரை என்னைத் தொடர்பு கொள்ளவே இல்லை.

என்னே வியப்பு! நேற்று வந்திருந்த அனைவரும் பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் வந்திருந்தனர். அனைவருக்குள்ளும் ஒருவித சுறுசுறுப்பு. திகில் படம் பார்ப்பது போன்ற உணர்வு. என்னால் இந்த செயலைக் கொஞ்சமும் சகித்துக் கொள்ள முடியவில்லை. மேலும், இந்த குற்றவுணர்வுடன் எல்லோரும் பிரிந்து போவதை நானும் விரும்பவில்லை.

அதேநேரத்தில், படிப்பில் கெட்டிக்காரப் பிள்ளைகளாக வேறு பள்ளிக்குச் செல்வதை விட உயர்வானது ஒழுக்கத்தில் சிறந்த பிள்ளைகள் என்று பேர் எடுப்பதாகும் என்பதில் நான் உடும்புப்பிடியாக இருந்தேன்.

இன்னொன்று இந்த சிறு தவறு நாளை பெரும் தவறில் போய் முடிந்து விடக்கூடாது என்கிற கவலைதான் என்னை அரித்துத் தின்றது.

ஓர் ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு, இப்படியாகச் சொன்னேன்.

"யாரு என்பது எனக்குத் தேவையில்ல. அது இங்க யாருக்கும் முக்கியமுமில்ல. சரிதானே?... இதுக்கு நான் ஒரு புது வழிக் கண்டுபிடிச்சிருக்கேன்!"

உண்மையில் அந்த கணநேரத்தில் எனக்குள் உதித்த யோசனை தான் இதுவும். அனிச்சை செயலாக இந்த ஏழாம் அறிவு என்பது ஆசிரியரிடம் திடீரென தோன்றும் உதயமாக இருப்பது முக்கியம் என்று நினைக்கிறேன்.

"இதுக்குப் பொறுப்பான அந்த மூணு பேரும் நான் கொடுக்கும் துண்டுச் சீட்ல மறைவா போயி நான் அதுல எழுதுனதை நல்லா படிச்சுப் பார்த்து குத்தத்தை ஒப்புக்கணும்னு நெனைக்கிறவங்க மட்டும் சரின்னு டிக் அடிக்கணும். மத்தவங்க ஒண்ணும் செய்ய வேணாம். அப்படியே திருப்பித் தந்துடலாம். அதுல நான் எழுதுனது என்னென்னா!..."

'இனி இந்த தப்பை என் வாழ்நாளில் ஒருநாளும் செய்ய மாட்டேன்!'

'எடுத்தத் தொகையைத் திருப்பித் தந்து விடுகிறேன்.'

'என் பொருட்டு நீங்கள் அதைத் தந்து விட சம்மதிக்கிறேன்.'

'இருந்த தொகை ரூ. ______ '

இதில் மூன்றாவதாக உள்ளதை நான் மனதார உதவுவதாகக் கூறியிருந்தேன். இந்த திடீர் பண நெருக்கடி கூட அவர்களைப் பொய்யுரைக்க வைத்துவிடும் என்று திடமாக நம்பினேன். நெஞ்சில் தைத்த நெருஞ்சி முள்ளோடு யாரும் இந்த வகுப்பைவிட்டுப் பிரியக்கூடாது என்பது என் எண்ணம். இந்த குற்றம் நிகழ்வதற்கான சூழலை ஏற்படுத்த நானும் ஒரு காரணமாக இருந்ததற்கு தண்டனை அனுபவிக்கப்பட வேண்டும் அல்லவா? பொதுவாகப் புழங்கும் இடத்தில் அந்தப் பணப்பையை வைத்தது என் தவறு. தனியாக வைத்திருக்க வேண்டும்!

வகுப்பு முழுவதையும் எல்லோரது நன்மைக்காகக் கண்களை உண்மையாகவே மூடிக்கொள்ள வேண்டிக் கொண்டேன். நானும் அந்தத் துண்டுச் சீட்டுகளை நீட்டியபடி இமைக் கதவுகளை நன்கு அடைத்துக் கொண்டு, கொஞ்சநேரம் அனைவரும் ஒருவித தியானத்தில் விழிகள்மூடிக் காத்துக் கிடந்தோம்.

என் விரலிடுக்குகளில் வழிந்த திடீர் துண்டுச் சீட்டுகள் மெதுவாக எடுக்கப்பட்டு சிறிது நேரத்திற்கு பிறகு மீண்டும் தஞ்சமடைந்ததை என்னால் உணர முடிந்தது. சம்பந்தப்பட்டவர்களின் சிறு சலசலப்பைத் தவிர வேறெந்த சத்தமும் அங்கில்லை. அப்படியொரு அமைதி.

அனைவரையும் பழையபடி இயல்பாக இருக்கப் பணித்தேன். எல்லோர் முகத்திலும் ஒருவித புத்துணர்ச்சி மேலிட்டது. எனக்கும். ஆனாலும், துண்டுச் சீட்டில் உண்மை வெளிவந்திருக்குமா என்கிற ஐயம் என் நாடித்துடிப்பை மேலும் அதிகமாக்கியது. மொத்தமே மூன்று தான்! ஒவ்வொன்றாக ஒருவித அச்சத்துடன் இதயம் படபடக்க பிரித்துப் பார்த்தேன். எதிரே இருந்தவர்களிடமும் அதைக் காண முடிந்தது.

முதல் சீட்டில் எதுவும் எழுதப்படவில்லை. அதேபோல், இரண்டாவதிலும் எந்தவொரு குறியும் இடப்படவில்லை. மூன்றாவதும் இப்படியே இருக்குமோ என்று பயப்பட்டேன். பிரித்துப் பார்ப்பதில் அவசரம் காட்டவில்லை. எனக்கும் தோன்றவில்லை. ஒருவேளை இந்த இறுதித் தேர்வில் நான் தோற்றுவிடுவேனோ என்று நினைக்கும்போதே வியர்வை

நெற்றியில் அரும்பத் தொடங்கிவிட்டது. யாரும் எதுவும் கேட்கவும் இல்லை. பேசவும் இல்லை.

நடுக்கத்துடனும் சலிப்புடனும் அதைப் பிரிக்கத் தொடங்கினேன்.

உண்மை என்னைக் கைவிடவில்லை!

முகம் பூரிப்பில் மலர்ந்தது. எம் பிள்ளைகளும் அதை அறிந்துகொண்டு விட்டிருந்தனர். ஓர் இனிய உதயத்தைக் கண்ட தாமரையாய் வகுப்பே பூத்துக் குலுங்கிக் கிடந்தது.

"சார்!..."

வாய்விட்டுக் கத்தினர். எனக்கு அந்த ஆனந்த உற்சாகத்தில் கண்கள் பனித்ததில் ஒன்றும் தெரியவில்லை. கைக்குட்டையை எடுத்து ஒத்தித் துடைத்து கொண்டேன். என் பள்ளிப் பிள்ளைகள் என் நம்பிக்கையைப் பொய்த்துப் போகாமல் செய்ததற்காக உளமார நன்றி கூறிக் கொண்டேன்.

"சார்! அந்தத் தொகை எவ்ளோ இருந்துச்சுன்னு எழுதியிருந்துச்சு?..."

ஒரு சிறுமி மட்டும் கவலையுடன் கேட்டது எனக்கு என்னவோ போலிருந்தது.

"அது என்னவாயிருந்தாலும் நான் தந்துடுறேன்னுதான் வாக்குக் கொடுத்துட்டேன்ல! உன் காசு எங்கியும் போகலை. புரிஞ்சுதா?"

சொல்லச் சொல்ல முட்டை முழி உருட்டி மௌனமானாள் அவள். முகத்தில் ஒருவித திருப்தி தென்பட்டது. எனக்கும் இது மகிழ்ச்சியே. ஆனால் ஒன்று மட்டும் இப்போது நன்றாக விளங்கியது.

சந்தர்ப்ப சூழ்நிலையால் தடுமாறித் தடம் மாறும் குழந்தைகளிடம் வீண் வெறுப்பையும் கொடிய குற்றவாளிகளுக்கான தண்டனையையும் முன்வைக்காமல் நிறைய அன்பையும் கொஞ்சம் அவர்கள் தம்மை உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்திக் கொள்ள வாய்ப்பையும் அதற்குரிய இடத்தையும் வழங்குவது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு பெற்றோரின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்பதைப் புரியவைத்த அந்த மூவருள் ஒருவர் நான் மதிக்கும் மாண்புமிகு மாணவர் ஆவார்.

நான் தேடிக் கண்டடைந்து விட்டேன். நீங்கள்?

வகுப்பு தொடரும்...

—

முனைவர். மணி கணேசன்,
பட்டதாரி ஆசிரியர், கைப்பேசி: 7010303298

# சாதீ

புள்ளே இல்லையா?
புழு பூச்சி வைக்கலையோ?
இன்னுமா முழுகுறா?
டாக்டரே பாக்கலையா?
அந்த கோயிலுக்கு போனியாளா?
சோசியம் பாத்தியலா?
தொரத்துற கேள்விக்கு
தொவண்டு போயீ
கோயிலு கொலாமுன்னு
ஓஞ்சு போன நேரத்துலே
வறண்டு போன
காட்டுல பருவமழையா
தவிச்சுப்போன வாயிலே
தண்ணியா நீ வந்தே

மலடின்ன பேரெ
மாத்திப்புட
மவளா தான் நீ வந்தே
மாவலட்சுமியே
மருமவளேன்னு
மாமனுங்க
மனசு நெறைய
தவமிருந்து பெத்தபிள்ளைனு
தாத்தா தான்
தாங்கி விட
அக்கத்துலே வச்சு
ஆத்தாகாரி
ஆராத்திக்க
ஆறு செஞ்ச குத்தோமோடி
அற்பாயுசு
உனக்கெழுத

எம்மபுள்ளயா இருந்தா
வெட்டி போட்டிடுவேன்னு
உசுப்பேத்திவிட்ட
வெட்டிப்பய கூட்டமா

ஊரு செஞ்ச காரியமா ?
உறவு செஞ்ச காரியமா?
அறிவிலியா போன
அப்பனா ?

ஆத்தமையிலே
இருந்த அம்மாவா?

அம்மா தான்
படிக்கலே
அவ படிக்காத
படிப்பை நான்
படிச்சுப்புடணுமுன்னு
நினைக்காத நீயா?

அரவணைச்சு
நல்லது கேட்டது
சொல்லிகொடுக்க
தெரியாத
ஆத்தாவா ?
தாத்தாவா ?

ஆறு செஞ்ச குத்தோமோடி
அற்பாயுசு
உனக்கெழுத

கறையை அழிச்சுப்புட்டோமுன்னு
காடத்து பண்ணிவிட்டு
காலத்துக்கும் பாவ
கறையை
கணக்கெழுதி வச்சதாரோ

தப்பை திருத்திபுட்டோமுன்னு
தலைமுறைக்கும்
தப்பாத தப்பு
தீர்ப்பை எழுதி போனதாரோ

பழி சொல்ல
தொடச்சுப்புட்டோமுன்னு
தலைமுறைக்கும்
சாவுக்குழி பறிச்சுவச்சதாரோ

சாதி சாதின்னு
ஓட்டு கேட்டு
சாதீக்கு
எண்ணெயே ஊத்துற
அரசியலா
ஆண்ட சாதி
ஆண்ட சாதின்னு
சாதிவிட்டு சாதி போனா
சாவுதான்னு
சவால் விடும்
பாவக்கதையா
ஆறு செஞ்ச குத்தோமோடி
அற்பாயுசு
உனக்கெழுத

படிச்சிருந்தா
பொழைச்சிருப்பியோ
சொந்த காலுலே
நின்னிருந்த
வாழ்ந்திருப்பியோ

ஓங்கி கொரோலெடுத்து
ஓங்காரமாய்
ஒப்பாரி வச்சிடாதான்
தோணுதடி
புள்ள குடிக்காத
பச்ச ஒடம்புக்காரி
பாலு ஒழுவறாதபோல
வத்திப்போன கண்ணுலே
கண்ணீரு தான்
நிக்கலையே

சாவை கொண்டாடும்
சாதியிலே பொறந்ததுக்கு



வெக்குதடி
வெறுக்குதடி
எம்மனசு
வேதனையில்
வேகுதடி

எட்டி அடியெடுத்து
நீ வச்ச
அந்த நிலவு மொகம்
எட்டாத தேசத்திலே
என் நெஞ்சில்
நிக்குதடி
என் மவளே
பாக்குறப்போ
ஏனோ மனம் ஏங்குதடி

தெய்வந்தான்
தெரியுதா
கொலசாமிதான்
குடியுருக்குதா
கேள்வி மட்டுந்தான்
தொக்கி நிக்குது
தொண்டைக்குள்ளே
விக்கி நிக்குது

மறுபொறப்பு ஒன்னு
உனக்கிருந்தா
எனக்கு மகளா
மறுபடியும் வந்துடு
பொம்பளையா
புத்தியோட
பொழைக்கிறத
பொறுப்போடு
கத்துதாறேன்

—

இளவரசி இளங்கோவன்

# கடும் கோடை

கண்ணுக்கெட்டிய தூரம்
வரை கானல்,

வெப்பத்தின் அளவை
பரிசோதிக்க
செருப்பில்லாமல்
சில அடி தூரப்பயணம்,

பகல் நேரத்தில்
வெளியே செல்லாதீர்களான
அக்கறையோடு பேச்சு,

தண்ணீர் நிறைய குடியுங்களென
கையிலிருந்த தண்ணீர் போத்தல்களை
கொடுப்பதென எல்லாம் சரி,

ஒரு மரம்
வெட்டி வீழ்த்தப்பட்ட நாளில்,

பறவைகளின் கதறல்களை
கண்டும் காணாமல் போன
நீ
யாராகயிருந்தாய்?



— மு. முபாரக்,
திருச்சி.

---

# உங்களுக்காகவும் வாழுங்கள்...!

காலமெல்லாம் குடும்ப நலமும்..
குழந்தைகள் வாழ்வும்.....
பிறகு உறவினர்கள்
உயர்வும்,ஊரார் நலனும்....?
இப்படி வாழ்ந்து முடித்து...
இதோ-

அவரின் இறுதி  ஊர்வலம்
முடிந்து...
ஒரு மணி நேரத்தில்-

ஆர்டர் செய்த சாப்பாடு ..
வந்துவிட்டதா?...

என்று கேட்டார்
உறவினர் ஒருவர்...!

குழந்தைகள் ஓடி விளையாட
ஆரம்பித்தனர்....!
மற்றவர்கள் கை பேசியில்
அவசரமாய் மூழ்கினர்....!

முறைபெண்ணிடம் மூச்சுவிடாமல்...
பேசிக்கொண்டிருந்தான் ஒரு
இளைஞன்....!

சாவு செலவு சற்று அதிகம் என
சொல்லிக் கொண்டிருந்தார்..
உடன் பங்காளி...!

விடுமுறை இல்லை..

இன்று இரவே ரயிலை
பிடிக்கவேண்டும்..
அவசரமாக கிளம்பினார்
சித்தப்பா பையன்....!

அண்ணன் போட்டிருந்த...
நகைகளை யார் கழற்றி
வைத்துள்ளார்கள்..!
என்று விசாரித்தாள்..
சமத்து தங்கை...!?

அடுத்த நாள்
சடங்கு துவங்கி...
பதினாறாம் நாள் வரை..
தொடர்ந்து சடங்குகள் முடிந்தன...!

வீடு வெறிச்சோடியது....!
உறவினர்கள் காணோம்...!
நண்பர்கள் காணோம்....!
அலுவலக நண்பர்கள் காணோம்...!

ஆனாலும் -
எல்லாமும் இயல்பாய்
நடந்தது...!
ஆடு குட்டி போட்டது..!
பங்காளி வீட்டில் திருமணம்
நடந்தது..!.
நடிகை விவாகரத்து செய்தார்..!
தேர்தல் வழக்கம்.போல்
நடந்தது...!
விலைவாசி உயர்ந்தது....!
திருவிழாக்கள் நடந்தன....!
குயில் கூவின...!
மயில் ஆடின...!
எதுவும் நிற்கவில்லை....!?
நீங்கள் இல்லை என்பதால்...!

வாழும்போதே சிந்தியுங்கள்...
நீங்கள்-
உங்களுக்காகவும் வாழ வேண்டும்..
காரணம் -
அடுத்த மானுட பிறவி
சாத்தியமில்லை....!?
—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



## வீட்டு கடன்

மளிகை கடன்
வாகன கடன்
அக்கா தங்கை கல்யாணம்
குழந்தை சீர் கடன்
பாட்டிக்கு வைத்தியம் என
எல்லாம் வந்து தொலைக்கும்
அவனது கனவில் வாலிபத்தில்
வரவேண்டிய கனவுகள் மட்டும்
இன்னும் வந்து தொலையவே
இல்லை ...!!

—

ச. இராஜ்குமார்.

# மௌனத்தின் பக்கத்தில்

இதோ உன்
மௌனத்துக்குப் பக்கத்தில்
அண்மித்து விட்டேன்...
பாளம்பாளமாய்
அடுக்கி வைத்து விட்டேன்...

சொற்பிரலாபங்கள்
தொலைத்த,
கவிதைத்தனங்கள்
விடுத்த,
தேவதைத்தனங்கள்
சூழ்ந்துள்ள,
சிணுங்கலின் கொம்புகள்
முளைத்த,
இதயத்தின் கணக்கற்ற
நேசத்தட்டான்பூச்சிகளை...

எத்தனையோ முறை
முயன்றும்
முடியவில்லை...

உன் மூச்சுக் காற்றிலே
கலைந்தும் பறந்தும்
போய்விடுகின்றன...

மீண்டுமவை எனக்குப்
படுத்துக்கொள்ளப்
பசும்புல் மெத்தையாகி விடுவதும்
என் வானமெங்கிலும்
கொள்ளைச்சிறகுகள் விரித்து
மஞ்சள் மழை பொழிவதும்
நிகழும்
இது போதாதா எனக்கு?
சொற்கள் இல்லாத வனாந்தரத்தின்
ஈரக்கசிவில்
என் ஆன்மா இளைப்பாறிக்
காத்திருக்கும்,
ஒரு களங்கமற்ற பூ
மலரும்வரை!!

## குறுங்கவிதைகள்

குழந்தையின் பசி
அதிகரித்த வண்ணம்
பணியில் தாய்மார்பில் வலி

முற்றத்தில் வெள்ளம்
காகிதக் கப்பலோடு
கடலாகும் சிறுமி

குட்டியீன்ற பூனை
கூரையிடுக்கில் பூச்சிகள்
ஆளில்லா பூர்வீக வீடு

கறுப்பும் வெள்ளையும்
பேதமின்றிப் போதிக்கின்றன
வகுப்பறையில்

பச்சை விளக்கு
விடிந்தும் அணையவில்லை
பலரின் முகநூல்

ஊதிய சோப்புக்குமிழி
உடைந்து போகிறது
மழலையின் பிரபஞ்சம்

இலையில் பொழிந்து

இருக்கும் பனித்துளியில்
அமர்ந்திருக்கிறது வானம்

சூடு கண்டதும்
மோட்சம் பெறுகிறது
மூங்கில்



—
*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

# சிரிப்பு

மானுட உணர்வின்
மகத்துவம்
இயற்கைத் தந்த
பெருவரம்

அழகைக் கூட்டி
நோயைத் தீர்க்கும்
உதடுகள் விரிய
உலகம்பேசும்

நாளும் சிறக்கும்
நன்மை கூட்டும்
வகையினில் பூரிப்பு
வருவது சிரிப்பு

சிரித்து வாழ்
அனைத்தும் சொந்தமாகும்
சிரிப்பு மலிவானது
ஆயின் மகத்தானது

கொஞ்சம் கொடு
தஞ்சம் புகும்
விஞ்சும் மனம்
அஞ்சும் துயர்.

ஒவ்வொரு நொடி
சிரிப்பிலும்
மரணம் தோற்கும்

ஈர்க்கும் காந்தம்
இமைக்கா விழிகள்
நேசிப்பின் சுவடு
பற்றும் கரங்கள்
சிரிப்பின் பதிவுகள்

பூக்களின் சிரிப்பில்
வண்டுகள் வருகை
மேகச் சிரிப்பில்
மழைநீர் விழுகை

மலையின் சிரிப்பில்
அருவியின் நடனம்
மரத்தின் சிரிப்பில்
உயிர்களின் சனனம்+++

சிரிப்பில் சாதி
இல்லை
வகை உண்டு

உதட்டினுள் சிரிப்பு

உரைக்கும் சிரிப்பு
உள்ளுக்குள் சிரிப்பு
ஊரார் சிரிப்பு

சிதறும் சிரிப்பு
சிந்தனைச் சிரிப்பு
அழுகைச் சிரிப்பு
அடக்குச் சிரிப்பு

தொடரும் சிரிப்பு
தோற்றச் சிரிப்பு
மகிழ்வுச் சிரிப்பு
மாற்றச் சிரிப்பு

மந்தச் சிரிப்பு
மறைப்புச் சிரிப்பு
காந்தச் சிரிப்பு
கவர்ச்சிச் சிரிப்பு

வகைகளின் வழியில்
வளரும் சிரிப்பு
ஆற்றலைக் கூட்டும்
அன்பைச் சுவைக்கும்

சிரிப்போம் நண்பர்களே
செலவில்லாத்து
சிந்திப்போம் அன்பர்களே
சிறப்பானது

சந்திப்பில் சிரிப்புகள்
மலரட்டும்
சாக்காடுகள்
புதைந்து ஒழியட்டும்...

—

ஹேமா லதா

---



**ஓவியம்:**
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# ஒரு சொல் கேளீர்

*1*
உங்கள் கரங்கள் ஏந்தியிருக்கும்
மலர்க்கொத்துகளில்
உறைந்தும் உலர்ந்தும் கிடக்கும்
அன்பின் வாசத்தில்
பூத்துக் குலுங்கலாம்
பாலைமனங்கள்.

*2*
உங்களை நோக்கி வரும்
அம்புகளை மாலைகளாக மாற்றுவது
உங்கள் உழைப்பிலும்
தன்னம்பிக்கையிலும் மட்டுமல்ல
உங்களது அணுகுமுறையிலும் உள்ளது

*3*
மலையுச்சியில் இளைப்பாறும்
பறவையின் கனவில்
கை கோர்த்துக் கொள்கிறது
மரமும் கூடும்.

(அகர முதல இலக்கியப் பேரவை வார
இதழ் - 14 ஜனவரி 2024 )

*4*
நீங்கள் நேசிக்கும்
உலகத்தின் போக்கில்
மாற்றங்களை விதைத்திட
மலர்ந்திடும் பூக்களென
மனதை விரியுங்கள்.
ஏந்திடும் கரங்களென
ஏக்கத்தை நிரப்பாதீர்கள்.

*5*
புழுவின் மனத்தில்
பறக்கும் ஆசை விரிய விரிய
தடைகள் உடைபடலாம்
வான்வெளியும் தென்படலாம்
வனமும் வரவேற்கலாம்
முட்டுவதே உங்கள்
வேலையாயிருக்கட்டும்.

*6*
நீங்கள் அழத் துவங்கும் போது
விழியைத் துடைக்க நீளும்
கரங்களின் அன்பில்
இன்னொரு சுற்று
வாழ்வை நீட்டிக்கலாம்.

*7*
துவண்டுவிழும் சமயங்களில்
தாங்கிக்கொள்ள
தோள்கள் இல்லாத வாழ்வில்
இன்பத்திற்கும் துன்பத்திற்கும்
எவ்வித சலனமும் நேரப் போவதில்லை.

*8*
கோடையின் பருவத்தை
தவறாது எழுதிச் செல்லும்
இயற்கையின் இதயத்தில்
மணலுக்குள் கால்கடுக்க
காத்திருக்கும் கொக்குகளின்
பிம்பங்கள் பதிவதில்லை.

*9*
தூரத்தில் கேட்கும்
ரயிலோசைக்கு நடுவே
தனித்து விடப்பட்ட
குயிலின் குரலில்
கிளையைத் தேடும்
ஏக்கப் பெருமூச்சு

*10*
காத்திருக்கிறது
இறக்காத சுமைகளைத் தேடி

சுமைதாங்கிகளென
முதியோர் இல்லத்துச் சுவர்கள்

*11*
மிட்டாயை வழங்கிய
கடைக்காரனின் வாழ்நாளில்
நிம்மதியை அருளிவிட்டுப் போகிறது
நடைபாதைச் சிறுமியின் புன்னகை.

*12*
பசிப்பிணி போக்கும்
மருத்துவராகலாம்
பசுமை வனத்தை
பாலையாக்கலாம்
ஏந்துவோர் கரங்களில்
ஒளி(ர்)கிறது
ஒரு சொட்டுத் தீ

*13*
சிலை வடிப்பவனும்
சிலையை வணங்குபவனும்
சிலையை
சிலையாகப் பார்க்கும் வரை
சிலையாகப் போவதில்லை

*14*
உதிரும் சிறகுகளை எண்ணி
ஒருபோதும் வருந்துவதில்லை
விரிகிற வானத்தை
வீடாக்கும் பறவைகள்

*15*
மலரும் உதிர
இலையும் உதிர
கிளைகளைத் தாங்கி
வெயிலை ஏந்தும் மரம்
வணங்கத் துவங்கியது
வேரின் நீட்சியை

—

இளையவன் சிவா,
கைபேசி: *9965359130*



# புத்தகம்

அவள் தந்த புத்தகத்தில்
தேடியும் காணவில்லை
காதல் கடிதம்

தூக்கியெறிந்தேன்
வெறுமையில்...

காற்றில் படபடத்து
பறந்து காட்டிய
பக்கங்களில்...
எனக்குள்ளும்
எட்டிப்பார்த்தது
வெட்கம்

வட்டமிட்டிருந்தது
பக்கம் எண்: *143*

—

சாயி ராம்,
தஞ்சாவூர்,
கைபேசி: *9443394625*

# மாறுவேடம்

அழுத்தத்தை குறைக்க
மாறுதலுக்காக
மாறுவேடப் போட்டி
கடவுள்களுக்கிடையே...

மயிலிறகைச் சூடி
புல்லாங்குழலை வாசித்தவாறு
ஆடுகளை மேய்க்கிறார் இயேசு
சிலுவையும் முட் கிரீடமும்
சுமந்தவாறு கிருஷ்ணன்
நவீன ஆடையணிந்து
நடையிடுகிறார் மகாவீரர்
அரச கோலத்தில்
மிளிர்கிறார் புத்தர்
பர்தா அணிந்து
பசுவிற்கு
தீவனம் தருகிறார்
மேரி மாதா...
கைதட்டி ஆரவாரம்
செய்கிறார்கள்
பார்வையாளராக
அமர்ந்திருக்கும் பிற கடவுள்கள்

அதே கணம்...
உயர்நீதிமன்றத்தில்
வழக்கு தாக்கல்
அக்பர் சீதா பெயரிட்ட
சிங்கங்களை
ஒரே கூண்டில் அடைக்க
கண்டனம் தெரிவித்து

—

பா. சிவகுமார்

# வலி நிறைந்த நேரங்களில்

வருடிக் கொடுப்பதற்காகத்
தேடிக் கொண்டிருக்கிறோம்
கவிதைகளாய் வரிகளை

உள்ளந்தனை நேர்த்தியாய்
வருடிக் கொடுக்க வேண்டுமே

அவர்களும் நமக்காக
தேடித் தேடி
சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள்
வார்த்தைகளை விடவும்
வலிகளின் குவியலை

நிச்சலனமானதொரு மனதிற்கும்
நிம்மதியாய் நித்திரைக்கும்
அழகாய் ஆழமாய்
கவிதைகளை தந்து விட்டார்கள்

சற்றே நிமிர்ந்து
மிடுக்காய் அமர்கையில்
அவர்களைச் சுற்றிலும்

எத்தனை நீவினாலும்
இயல்பு நிலைக்கு
மீள முடியததாய்

கிழித்து கிழித்து
கசக்கி கசக்கி
வீசப்பட்ட காகிதக் குவியல்கள்

— பி. ஹேமா,
முசிறி

# அவர்கள்

இங்கு எதைத் தேடி எதைப்பார்ப்பது
என்னவென்றெ அறியாமலே
அதற்கு பல முகங்களை அணிந்துவிடும்
அவர்கள் மத்தியால் தானே நமது
பயணம்

அவர்கள் நியாம்மாகத்தான் சொல்கிறார்
மூக்கின் மேல் உனக்கு கோவமென்று
அவர் மூக்கு சிவக்கும் படி
வந்த கோவத்திற்கு யார் பொறுப்பேற்பது

சின்ன பார்வைதானே என
சாதாரணமாக விட்டுவிடலாம்
அதன்பின் ஆயிரம் அரத்தமுண்டு
நண்பன் பொறாமையென்றான்
மற்றவர் கண்வைத்தலென்றனர்
அம்மா சொன்னார் இயலாமையின்
ஒரு சாயலென

அழகான பெண்களை கடந்து வந்தபிறகு
கொட்டிய அரளிப் பூக்களுக்கெல்லாம்
புதிய வாசனைப் பிறந்துவிட்டது
ஆனாலும்
எனது சலதோசம் தான்
குறைய வாயப்புன்றி தும்மிக்
கொண்டிருக்கிறது

சல்லடைக்கண்களுக்கு நிச்சயம்
ஊடுறுவிச் செல்லும் திறன் அதிகம்
விழுந்த பார்வைக்கெல்லாம்
காதலென்று பெயர் வைத்து கனியாக
விற்கின்றதே...

## இயற்கை

நீண்ட நேர புழுக்கத்திற்கு பிறகு
வாசல் வந்து அமர்கிறேன்
இல்லாத மரங்களிடமிருந்து காற்றினை
வேண்டி..

மர இருக்கையில் அமரும்
பொழுதெல்லாம்
அப்பாவின் சிறு வயது வேங்கை மரம்
ஞாபகம் எனக்கு..

அப்பா அடிக்கடி கூறுவார்
அக்காவின் திருமணத்திற்கு சீர் செய்திட
அந்த பூசனை மரமென்று
சாலை விரிவிற்கு எப்போதோ
வெட்டிவிட்டார்கள் என்பதை இல்லாத
அப்பா எப்படி அறிவார்...

மரக்கன்று நடச் சொல்லி தம்பியிடம்
கூறியுள்ளனர்
வீட்டைச் சுற்றி நிரம்பிய
தொழிற்சாலைக் கழிவுகளில் எங்கே என
விதைகளை நடுவது....

சன்னலை திறக்கும் பொழுதெல்லாம்
அந்த மாமரக்கனி கண்களை உறுத்தும்
இப்போதெல்லாம் சிகப்பும் மஞ்சளும்
பச்சையென மின்னுகிறது
இது புதுவகை பழமென ஏமாற்றி
வருகிறேன் தங்கையை இல்லாத
எதிர்கால வாழ்க்கை கனியை...

## காட்சிப்பிழை

இவைகளையெல்லாம் எப்படி
நான் நம்புவது

கையினை அறுத்து
குருதியின் நிறம் சிவப்பென
அடையாளம் காண்பிக்க
வேண்டியுள்ளது அவர்களுக்கு

எந்த நிலையிலும் அவர்களை
அருகினில் விட்டுவிடாதீர்கள்
நமது கடந்தகாலத்தில் அவர் தீரப்பு
செல்லி சென்றுவிடுவார்கள்

இதுதான் உண்மையென
பலமுறை சொல்லியே தீருங்கள்
தற்கொலைக்கு
இறுகியவன் கழுத்தில்
உடைந்த சங்கெலும்புகளுக்கு
மத்தியில் கிடைக்கும் உண்மையும்
பொய்யும்

சென்றவரெல்லாம் வந்துவிடுவார்
வண்ணக்காகிதங்கள் நிறையும் பொழுது
வளைந்த முதுகெலும்பிற்கு
இப்போதுதான் நம்பிக்கை வளையங்கள்
பொறுத்தப்பட்டு வருகின்றன

இருந்தாலும் பரவாயில்லை
அவர்களை எப்பொழுதும்
பொருட்படுத்த அவசியமில்லை
தலைகீழாய் தொங்கும் வௌவ்வாலின்
கண்களைப் போலத்தான்
இருண்டு கிடக்கிறது
அவர்களின் மனங்களும் செயல்களும்

வாயில் நுழைத்து கழிவென வரும்
பொருட்களுக்கு
நாமாகத்தானே பெயர் வைக்கிறோம்
சரியும் தவறென
உணவும் கழிவென...

## விழுந்ததும் பச்சையாகிறது கழுகின் இறகு

தினமும் வானத்தை
நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்துக்
கொண்டிருக்கிறேன்
பாரப்பவரெல்லாம்
என்னை பைத்தியக்காரன் என்றனர்
கடவுளென வானைப் பார்த்து
வணங்குவோர் உட்பட..

அட
உள்ளங்கையில் மெழுகுவர்த்தியை ஏற்றி
செல்பவருக்கு
குளம் நிரம்பி வழியுமென
அடையாளப்படுத்துகிறது
குருதி நிரம்பி வழியும் உள்ளங்கை

நிலை குழைந்த குருவிக்கூட்டிலிருந்து
விழுந்த ஓர் ஈக்குச்சிதான்
இன்னொரு கூட்டின்
முட்டைகளைத் தாங்கி குஞ்சிகளை
சுமந்து நிற்கிறது

நேராக கோடுவரையும் பென்சில்
நுனியில்
கருமையை பூசியது
இதுவே போதுமென
தன்னைத்தானே மாய்த்து அதனுடனே
மறித்துப் போகிறது பென்சில்
இதுவரை வரைந்த காகித காடெல்லாம்
ஒரே மழை

கனி பறிக்க கல்லெறிந்து
விழுந்த இடமெல்லாம் கனிகளின்
சுவைக்கற்கள்
ஒரே ஓர் கல் மட்டும் முட்டைகளுக்ள்
முட்டையாக அடைபட்டது

வளர்ந்த கிளியின் வண்ணம் மட்டும்
வானைக்கிழித்து பறக்கிறது
விழுந்ததும் பச்சையாகிறது
கழுகின் இறகின் நுனி

## சற்று திறத்தல்

யாருக்காகவும் எனது கதவுகளை
திறந்து வைத்திருக்கமாட்டேன்
மனிதர்கள் கால் தடம் பதிவது பற்றி
கவலையில்லை
அந்த கொசுத்தொல்லைதான்
தாங்கவே முடிவதில்லை

எனது வாசல் நிரம்பிய
நாற்றக்கழிவுகளுக்கு நான் ஒரு போதும்
பொறுப்பேற்க இயலாது
ஆனால் மூக்கடைத்து செல்பவரின்
நாசித்துவாரத்திற்கும்
எச்சிலுக்கு இணையாக துப்பியெறிந்த
வார்த்தைகளுக்கு அவ்வப்போது நான்
பொறுப்பேற்றுதானே ஆகவேண்டும்

மூன்று பக்கம் சமமாகி நான்காவது கால்
உடைந்தேறியதும்
வாகாக பள்ளம் நகர்கிறது
வட்டில் வணங்காத குண்டின் ஒரு பாதி

நேர்குத்து நேர்கிறது
கிடைமட்டம் தளர்கிறது
இறுக்கம் பெற்ற பின்புதான் இடமும்
வலமும் அனுமதி வழங்குகிறது கதவு
தாழ்ப்பாளின் சத்தம் தான் சற்று
கொடுமை

தாழின் நுழைந்து வழி கொடுக்கும்
இழித்து மேல்நோக்கி கீறிடும்
அலுமினிய கூர்களுக்கு
கீறிதான் திறக்க வேண்டியுள்ளது
ஒவ்வொரு மனக்கதவுகளையும்

பழங்காலம் பூட்டிய மனங்களுக்குதான்
கீறி மாளாது
எத்தனைக் கோடுகள் இடமும் வலமாய்

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# உனக்கும் எனக்கும் மட்டுமே

தெரிந்த அந்த
செல்லப்பெயர் சொல்லி
அழைத்து எத்தனை
நாட்களாகின்றன தெரியுமா??

குறைந்தபட்சம் அந்த
செல்லப்பெயராவது
நினைவில் இருக்கிறதா??

முன்பெல்லாம்
ஒவ்வொரு மழைக்கும்
புதிது புதிதாய்
பல செல்லப்பெயர்கள் சூட்டுவாய்
அதிலொன்றாவது
சொல்ல முடியுமா??

இப்போதெல்லாம்
அழுத்தம் திருத்தமாக
என் முழுப்பெயர்
சொல்லியே அழைக்கிறாய்

ஒவ்வொரு முறை
அதனை கேட்கும் போதும்
கொஞ்சம் கொஞ்சமாக
எங்கோ தொலைந்து போகிறாய்!!

2) காதல் பெட்டி

ஒரு தலையாக காதலித்த பெண்ணை
பல வருடங்களுக்குப் பிறகு
தன் மனைவி குழந்தைகளுடன்
யதேச்சையாக சந்திக்கிறான்....

இப்போதும் அவன்
மூச்சுக் காற்றின் வேகம்
தானாய் அதிகரிக்கிறது....

வயிற்றுக்குள்ளிருந்து
ஒரு வயதான பட்டாம்பூச்சி
படபடவென தன் சிறகுகளை
அடித்துக் கொள்கிறது....

தொண்டைக் குழியில்
சிக்கிக் கொள்கின்றன
அவன் பேச நினைக்கும் வார்த்தைகள்....

அன்று முதல் இன்று வரை
ஏதும் தெரியாத அவள்
இவன் பிள்ளைகளின்
கன்னத்தை மெல்ல வருடி
சாக்லேட்டுகளை அள்ளித் தருகிறாள்....

பரணிலிருக்கும் அவளின்
பழைய பெட்டியில்
இந்த புதிய உறைகளை
சேர்க்க வேண்டியது
இனி இவன் வேலை....

—

பிரபுசங்கர். க

# தாத்தா

கொளுத்தும் வெய்யிலில்
வியர்வை நீரை
வழித்தெடுத்து
பூமியில் சிந்தி
கிளறும் தாத்தாவிற்கு
இந்த பூமிதான்
தாய்

களைப்பைப் போக்க
அதன் மடியிலேயே
படுத்துறங்குவார்

அசந்துறங்கும் தாத்தாவிற்கு
குழந்தைகள் போல்
தென்றலை வீசும்
தென்னங்கீற்றுகள்

தாய்ப்பால் போல
நீரைச் சுரந்து
தாகம் தணித்து
நெஞ்சை நனைக்கும்
கிணற்றில்
சூரியனும் படுத்துக் கிடக்கும்
தாத்தாவைப் போல

தினம் தினம்
வளரும் கன்றுகளை
அண்ணாந்துப் பார்த்து
அக மகிழ்வார்
தாயைப் போல
தாத்தா!

வளர்ந்தாலும்
எப்போதும்
தனது குழந்தையென
தாத்தாவின் காலடிகளை
நெஞ்சில் சுமக்கிறாள்
பூமித்தாய்

திடீரென
மாண்டு போனார்
தாத்தா!

வளர்ந்து
காய்க்கத் தொடங்கிய
மரத்தில்
சில கனிகள்
உதிர்ந்து விழுகின்றன

தாத்தாவிற்கு
கனிகள் தருவதாக
அசைந்து நெகிழ்கிறது
மரம்

உரமாக மாறி
வேருக்கு
உயிரூட்டிக் கொண்டிருக்கிறார்
பூமியில் புதைந்த பின்னும்
தாத்தா!

—

சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
அலைபேசி: 9944315732



# பால் வீதி கனிகள்

வந்து போகும் ஒளிக்குள்
தூசு துகள் தொன்மம் என்கிறேன்
சுழலும் நிகழ்தல்
சூனியத்திலிருந்து தான்
தூரங்கள் வெகு தூரங்களை
சுற்றிச் சுற்றி
தொடுவானமாக்கி விட்டது
புல் நுனிகளிலெல்லாம்
பால் வீதி கனிகள்
ஊர்ந்து கொண்டே நிற்கும்
தவம் கொண்டிருக்கிறது
ஊர்க்காடு
நடுவான ஒட்டையென
நண்பகல் காண்கிறேன்
ஆடு மேய்த்து கண் அசருகையில்
ஆகாயம் கொஞ்சம் அருகே கிடக்கிறது.

## குற்றமே தண்டனை

மனிதர்கள்
பூதங்களாவார்களா
ஒவ்வொரு குரலிலும்
ஓராயிரம் டெசிபல்கள்
ஒளி கூடிய கிசுகிசுப்புகளில்
ஊடுருவும் ஒலிப்பான்கள்
எந்தப் பாதமும்
பாறை உருட்டுகிறதே
ஒரு சிறு பறவையின்
கத்தலும்
இடி இறக்குறது
ஜன்னலடைத்து
கர்டைன் போட்ட பிறகும்
சன்ன குரல்கள்
வேவு பார்க்குமோ
அடுத்த வீட்டு கேட்டும்
நம்மையே திறக்கிறது
எங்கிருந்தோ எங்கோ
போகும் வாகனம்
வாசல் முட்டுவது
நம் கற்பனை அசதி
மூடியிருந்தும் முதுகில்
உதைக்கிறது கதவு
குற்றம் செய்யும் நாளில்
குற்றமே தண்டனை

## ஊஞ்சல் தவம்

வாசலில் கிடக்கும்
பழுத்த இலையை
கவனிக்கிறேன்
புரண்டு விட முயலாத
முக்தி அதற்கு

கண் மூடி படுத்திருக்கும்
நாயைப் பார்க்கிறேன்
நகர்ந்து விட வேண்டாத
இசை அதன் நெற்றியில்

திண்ணைக் கிழவிக்கு
திசை இல்லை
சுவற்றோவியமோ
வெற்றிலை குதப்பி
குழப்புகிறாள்

நொடியில் நகர்ந்த
மேக நிழலும்
யாகம் தான் போல
வானம் சாட்சி

முன் பின் ஆட்டத்தை
அணைக்கிறேன்

புத்த சிலைக்கு பக்கத்தில்
ஒரு ஊஞ்சல் தவம்

## வந்த பறவை

அந்தப் பறவையை
அடிக்கடி பார்க்கிறேன்
திசை அழைத்து வருகிறது
தினம் கொத்திப் போகிறது
நீல வானத்தை தந்து விட்டு
மஞ்சள் மாலை கொள்கிறது
வர்ண தேசத்தை சிதறி விட்டு
தூர தேசத்தை அணிகிறது
ஜன்னலற்ற வெளி அதற்கு
கதவற்ற ஒளி அதற்கு
பசித்த பொழுதுகளை
அசைக்கும் போதும்
சிரிக்கும் சிறகு காண்கிறேன்
நுட்பத்தின் ஒழுகுதலை
வழி நெடுக தூவி செல்லும் அது
வராத போது தோன்றுகிறது
எப்போதோ வந்த பறவைதான்
வானம் திரும்ப மறந்த நானும்.....!

—

கவிஜி

# பிறர் நலவாதிகள்

தடம் மாறும் போதும், தடுமாறும்
போதும்...

யாரோ ஒருவரின் வழிகாட்டுதல்
நிச்சயம் நமக்கு இருக்கத்தான் செய்கிறது.

அப்படிப்பட்டவர்கள் தான்,
நமக்கான பொக்கிசங்கள்!

அப்படிப்பட்டவர்கள் தான்,
நமக்கான ஆதாரங்கள்!

அப்படிப்பட்டவர்கள் தான்,

காலம் தந்த அற்புதங்கள்!

அது! தன் உறவாகவோ அல்லது
தன் உணர்வாகவோ அல்லது
தன் உயிராகவோ இருக்கக்கூடும்.

இன்னும் சிலருக்கோ,
அவர்கள் யாரென்றுக் கூட
தெரியாமலே இருக்கலாம்?!

ஆம்! தன் பெயரைக் கூட
சொல்ல விரும்பாத உத்தமர்கள்
இம்மண்ணில் இன்னமும்
இருக்கத்தானே செய்கிறார்கள்!!!

வாழ்வில் எந்தவொரு சுயநலமும் இன்றி,
மண்ணில் பிறரை வாழ வைத்துக்
கொண்டு...!

—

வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
துபாய்.



# காதலின் சிறகு

நீ கிளியானால் உன் மொழி கேட்க
குயில்களுக்கு ஆசை வரும்

காதலின் சிறகுகள் நீ

உன் அழகு மலையில் தவழுகின்றது
காதல் முகில்

உன் பார்வை மின்னலடிக்க
என் இதயம் காதல் மழை பொழிகிறது

நீ கண்களால் என் புல்லாங்குழலை
வாசிக்கின்றாய்

உன் முக அழகினை வென்றிட
பூ குட்டிகள் போடலாம்

உன் காதல் வாகனத்தில் என் கண்களை
ஏற்றிக் கொண்டு செலுத்துகிறாய்

நீ சுவாசிக்கின்ற தாஜ்மகால்

உன் அழகுக்கு இணையில்லை டாலரின்
மதிப்பு

நீ என் கைகுலுக்கும்போது விரல்கள்
பேசுகின்றன

நீ சுவரில் எறிந்தாலும் உன் கை வந்து
சேரும்
பந்து நான்

புற்களெல்லாம்
என் காதலின் பச்சைச் சொற்கள்

என் ஐம்புலக் கதவுகளையும் உடைத்து
வீசுகிறது
உன் அழகுப் புயல்

உன் இதழ்க் கத்தியிடம் கொலையாக
விரும்புகின்ற
ஆண் ஆப்பிள் நான்

காதல் கடிகாரம் உன் அழகு முள்ளால்
என்னை நீ நகர்த்துகிறாய்

நீ குறிஞ்சிப்பூ
என் நெஞ்ச மலையில் வினாடிக்கு,
வினாடி பூக்கின்றாய்

—

ராஜகவி

# வெயில்...

காலை பத்து
மணிக்கு மேல்
வெளியில் வராதீர்கள்
வெப்ப அலை வீசக்கூடும் என
எச்சரிக்கிறது வானிலை அறிக்கை
சுட்டெரிக்கும் நண்பகலில்
செங்கல் சூளையில்
நெருப்புக்குத் துணையாய்
தொழிலாளர்கள்
சூரியனைவிட அதிக கொதிநிலை
கொணடது
வயிற்றுப்பசி!

- நேசன் மகதி

# இலக்கு

கண்களில் எழுதும்
வார்த்தைகள்
கைகளில் விழும்போது
இதயம் சிரித்துக்கொள்கிறது

மென்மையான பூக்களை
சூடிய கேசங்களும்
வாசங்களோடு உறவாடிக்
கொள்கின்றன

பாதைகளை வெட்டும்போதே
புரிகிறது இதற்குள்ளும்
இத்தனை ஆழங்களா...?

கேலியை சித்தரித்து
பக்குவமாய் கத்தரித்து
பேசும்போது அழகாய்
சிரிப்பது நா மட்டுமே.....!

உடைந்த வலிகள்
உதிர்ந்த மலர்களாய்
மண்ணில் நின்று
மக்கிப்போகின்றன

தள்ளாத வயதில்
தடியோடு சுற்றும்
முதியவருக்கு துணை
ஒற்றைத் தடி மட்டுமே...!

சிங்காரமாய் பூக்கும்
மேடையில்
ஒய்யாரமாய் ஆடும்
நளினத்திற்கான பரிசு
கைதட்டல்களே...!

வாழும் நாட்களில்
உணர்ந்து கொள்வதும்
வாழ்க்கையின் வழிகளைத்தான்....!

உணராத போது
உயிர்மட்டும் இருந்தது
உணர்ந்த போது
எதுவுமில்லை
வாழ்க்கையின் பின்புலம்....!

அலையைத்தொட
முன்னோக்கிச் செல்லும்
கால்களைப்போல்
இலக்குகளை தொட
முன்னேறுங்கள்
அலையடிக்கும்
நம்வாழ்க்கையிலும்.....!

## நிழலும் நானும்

வாரி இறைக்கும்
வெயிலின் பிம்பமாய்
உருவெடுத்தாய்

அடங்காத கால்களும்
அடங்கி நிற்கிறது
உனைக்கண்டு

உருண்டோடும் வியர்வைத்துளி
உன்றன் பாதங்களில்
சரணாகதி அடைந்ததோ?

வெயிலோடு உறவாடி
கருஞ்சாயம் பூசி
விரவிக் கிடக்கிறாய்
பூமகள் மடிதனில்...!

நிழலெனும் போர்வையை
வெயிலுக்கு போர்த்திவிட்டு
அமைதியாய் கண்ணுறங்கும்
மரத்தடி அதிசயமே....!

இளைப்பாற இடம்தேடி
உச்சிவெயில் பிளந்திருக்க
உறக்கங்கொள்ள இவ்விடம்
உடல்கிடத்த வந்தாயே..!

கார்மேகக் கூந்தலாய்
பின்னலிட்டு நெழிந்தோடி
விரித்து வைத்த பாய்போல்
கண்விரித்து கைகாட்டி
வரவேற்கும் பைம்பொழிலே....!

காற்றை இழுத்து
கணப்பொழுதில் மலர்தூவலாய்
கரங்கோர்க்கும் சுவாசமே...!

வெயிலும் இறங்கி வந்து
விலகி நிற்க சம்மணமிட்டு
தோளோடு தாள் சுமக்கும்
நிழல்மகளே....!

பல தாள்கள் பூக்கிறதே
மரநிழல்கள் தாங்கிய
கிளைகளாய்...!

வானங்கள் காத்திருக்கும்
வயல்வெளி பூத்திருக்கும்
நட்ட மரங்கள் நின்றிருக்கும்
பகலெடுத்த வெயிலோடு
நகலெடுத்தாற்போல்
வந்திறங்கும் சொர்க்கமே...!

பகலில் தோன்றிய
இருளல்ல நீ
வெயிலின் பற்களை
பிடுங்கிய நீரூற்று...!
நீரோடையாய் நின்றாடி
தினம்வந்து தாலாட்டும்
நிலமகள் தந்த
நிழலே...!

நின் அருமை
வெயிலில் தெரியும்
பகலில் படம்பிடித்த
நிழற்புகைப்படமே...!
நிழலாய் நிற்க
கற்கிறேன் உன்னிடம்...!

—

ஞா. முனிராஜ்

# அனுதை

உறவுகள் இருந்தும்
உறவென்று யாருமில்லை
துறந்திடா மனமிருக்க
துறவுக்கும் வழியில்லை
மறந்திடா குணமிருக்க
மருந்துக்கும் மகிழ்வில்லை
இறந்திடா நினைவுகளால்
இன்னல்தான் வாய்த்ததுவே

## இருப்பு

இருப்பு இருந்தால்
இருப்பாக நீயிருப்பாய்
இருப்பற்றுப் போனால்
இருப்பின்றிப் போவாய்
இருப்பாக நீயிருக்க
இருப்பாக்கு நூலொன்று
இருக்குமே இவ்வுலகம்
இருக்கு மட்டுமே
(இருப்பு - சேமிப்பு பணம், இருப்பு - உயிர்ப்போடு இருப்பது)

— செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

---

# காற்றின் மொழி

கானகத்தில் காற்றாகி
உயிரிடத்தில் மூச்சாகி.
உடலிடத்தில் குரலாகி
வேயிடத்தில் இசையாகி.

இலையுடனே கதைபேசி
அலையுடனே நுரைபேசி.
சிலையான மனிதராசி
உனைமறந்தார் உயிர்வாசி.

நீர்சுமந்த முகிலை
நீசுமந்து வந்தென் .
மண்ணில் மழைகிறாய்
உந்தன் நிலைதான் என்ன?

வளியின் அசைவில்
ஒலியின் சத்தம்.
உலகில் ஒலிக்கும்
செவிகள் அறியும்.

எந்தன் மொழியை
எவர்தான் அறிவார்.
நானோ முகாரிராகம்
முகமில்லை பாவம்.

வாடையை நாளை
வாடகை விடலாம்.
தென்றலை நாளை
தெருவில் விற்கலாம்.

வேர்களை வெட்டியே
நகரங்கள் அமைக்கலாம்.
பூமியில் வளிக்கொன
போர்களும் நடக்கலாம்.

கருத்துக்கள் கூறியே
காலத்தை ஓட்டலாம்.
காரியம் நடத்திட்டால்
உலகையே காக்கலாம்.

—
கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.
கைபேசி: 94764594065

# நினைவுகள்

மழலை பொக்கை வாய்
முத்தமிட மரபாச்சி பொம்மை
நடை பழக நடை வண்டி,,
மூச்சு பயிற்சி பெற
பூவரசு இலையில் பீடில்,
பசுமை மாறாமல்
சோள தட்டையில்
பனை ஓலை வைத்து
காக்கா முள்ளில்
அச்சாணி வைத்த காத்தாடி,
குழந்தை விளையாட்டில்
இம்மி பிசகாமல்
மணலில் வீடு கட்டி
சுற்றிலும் காடு வளர்த்து
விலங்குகளை கொண்டு வந்து
வளர்க்க விட்டோம் அன்று,
இப்போதோ
மின்னணு உலகில்
பிளே ஸ்டோரில்
குழந்தைகள் விளையாட்டை
பதிவிறக்கம்
செய்து கொண்டிருக்கிறோம்
குளிர் சாதனை அறைகளில்

—

இரா. மதிராஜ்,
கைபேசி: 9788475722



# தேர்தல் நாள்

என்னடீ
இவ்வளவு வேகமாக போற...?
இந்த வேகாத வெயில்ல ..!

வாக்கு செலுத்திட்டேன்.
ஆடு மேய்க்க போகனும்.
அதுதான்டீ...!

அது சரி,

நீ யாருக்கு வாக்கு செலுத்துன?

நானா?

முதல்ல நீ யாருக்கு வாக்கு
செலுத்தினேனு சொல்லு?

அடி போடி...!
யாருக்கு வாக்கு செலுத்தி
ஆக போறதென்ன?

யாரு வென்றால் என்ன?
மழை பெஞ்சதான்டி

நாம்மெல்லாம் வெல்ல முடியும்..!

—

அ. செல்வராஜ்,
உடுமலைப்பேட்டை.
கைபேசி: 9524960630



# உவமைத்தொகை

பெயரே கவிதையாகிக்போகும்
ஒரு சில பெயர்களுள்
கயல்விழியும் ஒன்று

கயலே விழி
விழியே கயல் என்று
'விழிக்கயல்' என்ற உருவகம்
சொல்லும் போது
கவிதையாகாதது
கயல்விழி என்று
உவமை தனது
உருபை மறைத்துக் கொண்டு
தொகையாக சொல்லும் போது
வகையான கவிதையாகிறது

உருவகத்தை விட
உவமை தான்
கவிதைக்கு ஏற்ற
வகைமை போலும்!

கயல்விழிக்கு உவமைத்தொகை
இலக்கணக்குறிப்பு
கயல்விழி வந்தாள் என்பதோ
அன்மொழித்தொகை
ஆனால் இக்கவிதை இலக்கியச்சிறப்பு

இளங்கோவடிகள் கூட
தனது கானல் வரி பாடல் ஒன்றில்
எல்லாம் எழுதி
தீர்ந்த திங்கள் முகத்தில்
திங்கள் போன்ற அவளது முகத்தில்
கண்ணையே கயலென
முதலில் எழுதுகிறார்.

—

**மு. ஆறுமுகவிக்னேஷ்,**
சத்திரப்பட்டி.

---

# கிழிந்த நிலையில்

புத்தகம்
திறந்து பார்க்கிறேன்
உள்ளே உயிரெழுத்துக்கள்.

எதைத் தேடுகிறதோ காற்று
புத்தகத்திற்குள்.

தான் படித்ததை
யாரிடம் ஒப்புவிப்பதுயெனத்
தெரியாமல் அலைமோதுகிறது
காற்று.

ஒரு வார்த்தையைக் கூட
சிந்தாமல் சிதறாமல்
வைத்திருந்தது அலமாரியில்
நிறுத்தி வைக்கப்பட்டிருந்த
புத்தகம்.

—

**ஆனந்தன்,**
திருப்பூர்.



# நிறைய...

வாக்குவாதத்தில்
ரொம்ப அதிகமாய்
பேசறே
இத்தோடு நிப்பாட்டு

என்பதற்கு பின்னால்

என்னாலும் முடியும்
சங்கடப்படுவாய்

உன் அளவுக்கு
தரம் தாழ
விருப்பமில்லை

சுற்றி ஆட்கள்
இருக்கிறார்கள்
இருவருக்கும்
சங்கடம்

புரிதல் இல்லாமால்
பேசுகிறாய்
யோசி

இந்த கருத்து
வேற்றுமைக்கு
பிரிதல் வரை
செல்கிறாய்

என சொல்லாமால்
சொல்லும்
நிறைய செய்திகள்...

## அதை சொல்வதற்கும்

செல்வம் மட்டும்
வாழ்க்கையில்
மகிழ்ச்சி கொடுத்து விடாது
எல்லா பிரச்சனைகளையும்
தீர்த்து விட முடியாது
என்று சொல்லவும்
பணம் உள்ளவனாக

யோசிப்புக்கும்
விளைவாய்
நல்ல கருத்துக்கும்
ஆலோசனைகளுக்கும்
ஏட்டு படிப்பு
கட்டாயமில்லை
என்று சொல்ல
படித்தவனாக

இயலதாகவருக்கு
செய்யும் உதவிகள்
இறைவனை
மகிழ்விக்கும்
என்று சொல்லவும்
மனிதபமானத்துடன்
பரிச்சியம்
உள்ளவானாக

புதியவை
தெரிந்து கொள்ளவும்
கல்வி கற்கவும்
வயது தடையில்லை
என்று சொல்லவும்
அதை நோக்கி
பயணப்பட்டவனாக

இருக்க வேண்டும்

பிறரால் ஏற்று
கொள்ளப்பட

## அப்போது எல்லாம்...

நீண்ட நிதான
விளக்கங்கள்
கொடுத்த பின்னும்
புத்திக்கொண்டு
செல்லாத போது

உள் வாங்கினாலும்
தான் சரி என்று
முன் அனுமானம்
கொள்கையில்

தாம் சொல்ல நினைத்தது
எல்லாம் பகிரப்படுகையில்

பேசு பொருள் பற்றிய
விபரங்கள் தெரியாத
போது

உதிர்க்கும்
உதட்டு வார்த்தை
'சொல்வதற்கு ஏதுமில்லை

## அந்த குரல்கள்...

இன்றைய பணிகள்
பாக்கி உள்ள நிலையில்

"இப்படித்தான்
நாளைக்கு
நாளைக்குன்னு சொல்றே"

ஒரு புதுப்பணி
சிரமம் கொடுக்கும் போது
"ஆரம்பத்திலே
எல்லாம் சிரமமாய் தான்
இருக்கும்"

இழப்பிலும்
சோகத்தில் இருக்கையில்
"வாழ்க்கைன்னா
ஏற்றம் இறக்கம்
இருக்கத்தான் செய்யும்"

வெற்றியின் மகிழ்வில்
"உன் உழைப்புக்கு
அங்கீகாரம் கிடைத்திருக்கிறது"

என
அருகில் இருப்பவர்களின்
பேச்சு

நம் மனதின்
குரலாய்...

## ஒரு முறைக்கு இரு முறையாய்...

தன்னாலோ
பிறராலோ
இல்லை
சரியாய் புரிதல்
இல்லாமலேயோ
சொல்லப்படும்
அமில வார்த்தைகளால்
அந்த கணத்தில்
ஏற்படும்
அவமானமும்
வேதனையும்
ஒருமுறை தான்

அதையே
யாருமற்ற பொழுதுகளில்

நினைத்து
நொந்து
சங்கடப்பட்டு
உபயோகில்லாதவனோ
என்று மறு முறையும்
யோசிப்பது
வேறு யார்
மனம் தான்

## ரொம்ப ரொம்ப பழசு என்றாலும்...

ஏழை
வசதியானவன் ஆவதும்

பசித்தவனுக்கு
அருமையான
உணவு கிடைப்பதாயும்

தோற்று கொண்டே
இருப்பவனுக்கு
வெற்றி பெறுவதாயும்

எதிரிகளும்
துரோகங்களும்
வசை மொழி பாடியவர்களும்
சிரமம் கொடுத்தவர்களும்
குணம் மாறுவதாகும்

காட்சிப்படுத்தப்பட்டு
அது கடைசியில்
'கனவு'
என்று காட்டப்படும்
திரைப்படங்களிலும்
தொலைக்காட்சி
நெடுந்தொடரிலும்
'யுக்தி'

ரொம்ப ரொம்ப பழையது
என்றாலும்

இன்றைக்கும்
யதார்த்த வாழ்க்கையில்
போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு
அடிக்கடி அடிக்கடி
வரும் கனவு தான்
குறைந்த பட்ச
தற்காலிக நிவாரணமாய்

## எங்கே?

திரும்ப திரும்ப
ஒன்றை செய்கையில்
வரும் 'சலிப்பு'

தொடர் முயற்சிக்குப்பின்னாலும்
ஏற்படும் தோல்வி
தரும் 'வருத்தம்'

எதிர்பார்த்தது
நடக்காது போகும்
வரும்'ஏமாற்றம்'

எண்ணப்படியே
செயல் அமைய
கிடைக்கும் 'தன்னிறைவு'

முடிவுகள்
தனக்கானதாய்
அமைய
பெறுகின்ற 'சந்தோசம்'

சேவை சிறப்பாய்
தரப்பட்டதற்காய்
அளிக்கப்பட்ட

பாராட்டில்
கிடைத்த 'நம்பிக்கை'

பிறரின்
எண்ணம் செயல்
பார்த்து
வருகின்ற 'வியப்பு'

அடுத்தவரின்
கஷ்டம் பார்த்து
உணருகின்ற ' இரக்கம்'

தடுமாறுபவரை
பார்த்து
கேட்காமலே
தோள் கொடுப்பதில்
ஏற்படும் 'மனிதம்'

இத்தனை
உணர்வுகளும்
ஒரே இடத்தில் தான்

எங்கே
மனதில்...

## அன்றும் இன்றும்

அன்று
பொழுது போக்கில்
பெரும் பங்கு வகித்த
திரைப்படங்கள்
காண விருப்பம்
இருந்தும்
பார்க்க இயலாமை

இன்று
கடைசியாய்
திரைப்படம்
பார்த்த ஆண்டே
நினைவில் இல்லாத
அளவுக்கு
நாட்டம் இல்லாமை

அன்று
வித விதமாய்
ஆடைகள் வைத்திருக்கும்
உறவையும்
நட்பையும்
காணுகையில்
நமக்கு கிடைக்கவில்லையே
என்ற ஏக்கம்

இன்று
இவ்வளவு ஆடைகள்
நமக்கு எதற்கு
இதை எல்லாம்
எப்போது அணியப்போகிறோம்
என்ற அளவுக்கு
சலிப்பு

அன்று
தினு தினுசாய்
உணவு பொருள்கள்
உண்ண உணவகம்
செல்ல ஆசை

இன்றும்
நிறைய
வாய்ப்பிருத்தும்
நாட்டமின்மை

அன்று
சிறப்பான
கல்வித்தகுதியால்

வாழ்க்கை அட்டகாசமாய்
இருக்கும் என
நம்பிக்கை

இன்று
அது மட்டும்
போதாது

நிறைய
அனுசரிப்பும்
பொறுமையும்
ஒத்துழைப்பும்
சலிப்பின்மையும்
இலக்கு பற்றிய
தெளிவும்
செயல் முடிக்க
தொடர் திறமை
வளர்த்தல் தேவை
என்ற புரிதல்
கள யதார்த்தம்
தெரிந்த பின்...

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
கைப்பேசி: 9994920236



# புதுக்கவிதைப் பூக்கள்

அவள்
ஒப்பனை முடிந்து
நிலைக் கண்ணாடியில்
முகம் பார்த்த போதுதான்
அவளின் காதோர
ஒற்றை ரோஜாவும்
அதனழகை
சரிசெய்து கொண்டது.
/

தூங்காமல்
விழித்திருக்கும் இரவினை
என்னைப் போலவே
தூங்காத யாரோ ஒருவனும்
ரசித்துக் கொண்டிருக்கிறான்.
/

பூவுக்கொரு முத்தமென
தருவாய் என்றிருந்தேன்.
இதழுக்கொன்றென
ஏராளம் தந்து முடிக்கிறாய்.
/

காதலியின் திருமணத்தை
முன்நின்று நடத்துகிறேன்.
நல்ல நண்பனாக.
/

நிகழ்காலத்தில்
கடந்தகாலத்தை நினைத்துக்
கொண்டிருக்க கேள்விக்குறியாகும்
எதிர்காலம்.
/

உணர்வற்ற
நிலைக் கண்ணாடி
உள்ளது உள்ளபடி

பிரதிபலிக்கிறது
உணர்ச்சியை.
/

ஓடினாலும்
பள்ளத்தில் தேங்கினாலும்
எனக்கான கரையை
நானே உண்டாக்கிடும்
நீர் நான்.
/

அசையும் என்னிடம்
நிறைய அசையாச் சொத்துக்கள்.
பின்பொருநாள்
நான் அசைவற்றுப்போக
எதுவும் வரப் போவதில்லை
என்னுடன்.
/

எப்போதும் நல்லதைத் தர
தயாராக இருக்கிறது உலகம்.
நாம்தான் அதனிடம்
வேறு எதையெதையோ
எதிர்ப்பார்த்து காத்திருக்கிறோம்.
/

ஒருவர்
குறித்த அபிப்பிராயத்தை
ஒவ்வொருவர் மனங்களிலும்
ஒவ்வொரு மாதிரி விதைக்கிறது
காலம்.
/

இரவின் நிறம்
இருட்டாக இருந்தாலும்
அதனிடமில்லை ஒளிவு மறைவு.
/

மலரோடு பேசிவிட்டு
கொஞ்ச நேரம் இலை மீதும்
அமர்ந்து கொள்கிறது
வண்ணத்துப்பூச்சி.
/

செதுக்கச் செதுக்க
மெருகேறுகிறது
எப்போதோ எழுதிய கவிதை.
/

காற்றில் நகரும் சருகுகள்
நிலத்தோடு பேசிக் கொள்ளும்
சலசலப்பு.
/

இதயத்திலிருந்து
இறக்கிவிடு
உன்னோடு நடந்து வருகிறேன்.
/

பெருந்திரளான கூட்டத்திலும்
என்னை மட்டும்
தனிமைப்படுத்தி அழைக்கிறது
என்னவளின் விழிகள்.

- கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி : 9443139353



# கிராமப்பேருந்தில் புளியம்பூக்கள் – ஹைக்கூ நூல் விமர்சனம்

நாம் மூன்று வரிகள் ஹைக்கூ வை வாசித்து இருப்போம் ஆனால் ஒரு வரியில் ஹைக்கூ என்பது மிகவும் சொற்பம் தான் ஒரு நூலின் தலைப்பை தான் சொல்ல வருகிறேன் ஒரு வரி ஹைக்கூ என்று

"கிராமப் பேருந்தில் புளியம்பூக்கள்"

இந்த ஒரு வரியை கண்களை மூடி சிந்தித்து பாருங்கள் பல காட்சிகள் பல நினைவுகள் பல அர்த்தங்கள் கொடுக்கும்.

சாலையின் இருபுறமும் புளிய மரங்கள் அதனிடையில் பேருந்து பயணம். புளியம்பூக்கள் பேருந்தின் மீதும் நம் மீதும் பூக்கும் அற்புத நிகழ்வு அடடா!!வாழ்வு என்றால் இதுவல்லவா! என்று நினைக்க வைக்கும் தருணம்.

காட்சியை அடுத்து ஹைக்கூ வில் மனித வாழ்வியலின் ஆழமான கருத்து , புளிய மரங்கள் எவ்வளவு காற்று மழை அடித்தாலும் அதன் உறுதி தன்மை பார்த்தால் ஆச்சரியத்தை உண்டாக்கும். அந்த மரங்களை போல மனிதர்களும் வாழ்வில் எவ்வளவு துன்பம் வந்தாலும் எதிர் கொள்ள வேண்டும் என்ற ஆழ்ந்த கருத்தை உணர்த்துகிறது. ஜென் என்றால் ஆங்கிலத்தில் *JUST BE* என்று சொல்வார்கள். இந்த புளிய மரங்கள் நம்மை அப்படி இருக்க வலியுறுத்துகின்றன. இயல்பாய் இரு என்று இதுவே ஜென்னின் அடிப்படை கொள்கை ஆகும்.




ஒரு நூலின் தலைப்பே இவ்வளவு நம்மை பேச வைக்கிறது என்றால்
இந்த நூலில் உள்ள ஹைக்கூ கவிதைகள் நம்மை எவ்வளவு பேச வைக்கும் சிந்திக்க வைக்கும் பாருங்கள்.

இந்த நூலின் கவிஞரை உங்கள் அறிமுகபடுத் ஒரு வரியை மட்டும் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'

இப்படி தான் இவருடைய சிந்தனைகளும் செயல்களும் இருக்கும். ஆச்சரியம் என்னவெனில் இது தான் இவரின் முதல் ஹைக்கூ தொகுப்பாம் நிச்சயம் இருக்காது. நான்கு முறை இவருடைய நூலை வாசித்து விட்டேன்

ஒரு ஆய்வு மாணவனை போல அவ்வளவு ஆழமான கருத்துக்கள் நேர்த்தியான சொற்கள் , வாசிக்க வாசிக்க நம் எண்ணத்தில் எழும் அற்புதமான காட்சிகள், வாசகனை சிந்திக்க வைக்கும் தன்மை இப்படியாய்ச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒவ்வொரு ஹைக்கூ-வை வாசிக்கும்போதும் நினைத்து பார்க்கிறேன் கவிஞர் இயற்கையோடு எவ்வளவு ஒன்றி வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்று. ஐயா அமுதபாரதியும் தோழர் மு.முருகேஷ் அவர்களும் சொல்வார்கள் ஹைக்கூ என்பது சிந்தித்து எழுதுவது இல்லை இயற்கையைக் கவனித்துக் கொண்டேயிரு ஹைக்கூ தன்னால் வருமென்று. அது போல தான் இந்த நூலில் உள்ள நூறு கவிதைகளும் கவிஞருக்கு இயற்கை கொடுத்திருக்கிறது.

ஹைக்கூவை எழுத ஒரு இலக்கணம் இருப்பதை போல வாசிக்கவும் ஒரு இலக்கணம் இருக்கிறது. முதல் இரண்டு வரிகளை இரண்டு முறை வாசிக்க வேண்டும்
அப்படியே! கண்களை மூடி மூன்றாவது வரி என்னவென்பதை வாசகன் சிந்திக்க வேண்டும்.

ஒரு விடுகதை போல ஏராளமான வார்த்தைகள் வந்து விழும் அந்த ஹைக்கூவோடு பொறுத்திப் பார்க்க வேண்டும் பிறகு கவிஞர் என்ன எழுதி இருக்கிறார் என்று வாசிக்க வேண்டும்

இப்போது இந்த மூன்று வரிகள் உங்களுக்கு ஒரு காட்சியைத் தரும் திரும்பவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் வாழ்க்கைக்கு ஆழ்ந்த தத்துவம் ஒளிந்து இருக்கும்.

இப்படி இந்த நூலில் உள்ள ஒவ்வொரு ஹைக்கூ கவிதைகளும் அற்புதமாக இருக்கிறது ஆழமான கருத்தை வெளிப்படுத்துகிறது.

உண்மையில் இந்த நூலை சனவரி புத்தக கண்காட்சியில் வாங்கி இந்நாள் வரை எல்லா பேருந்து பயணத்திலும் கையில் வைத்து கொண்டு வாசித்து சிந்தித்து வருகிறேன். அருகில் அமர்ந்து வரும் பயணியிடம் இந்த நூலை வாங்கி வாசியுங்கள் மனித வாழ்வின் இரகசியம் அடங்கி இருக்கு என்று சொல்லி வருகிறேன்.

இந்த கிராமப் பேருந்தில் உள்ள நூறு பூக்களில் ஒரு பூவின் வாசம் உங்களுக்காக...

வளர வளர
தன்மை மாறிடும்
சிறுகருவேல முள்

இந்த ஹைக்கூ வை வாசித்த உடன் சட்டென்று நம் முன் ஒரு காட்சி தோன்றும். ஆம் உங்களுக்கு தோன்றிய அதே காட்சி எனக்கும் தோன்றியது பிறகு நான் இப்படி சிந்தித்து பார்க்கிறேன் மனிதன் ஆரம்பத்தில் இந்த

கரு வேல செடியை போல தான் சரியான ஒரு வடிவம் இல்லாமல் இருக்கிறான்; படிப்படியாக இந்த உலக மனிதர்களை உற்று நோக்குகிறான்;

இயற்கையை நேசிக்கிறான்; எல்லா உயிர்களிடத்தில் அன்பு கொள்கிறான்; கல்வி கற்கிறான் தன்னை சீர் படித்தி கொள்கிறேன்; காடுகளிலும் மேடுகளில் சுற்றித் திரிந்தவன் நாகரிகமடைகிறான்.

அந்த முள்ளின் தன்மை மாறுவது மனிதனின் அறிவும் முதிர்ச்சி அடைகிறது என்பதை நான் புரிந்து கொள்கிறேன். இன்னும் சிந்தனையை விரித்து கொண்டே போகலாம்
உங்கள் சிந்தனைக்காக சில பூக்கள்.

சீமை வேலி மரத்தில்
காய்த்து இருக்கின்றன
பீர்க்கங்காய்கள்
தூரத்தில் மலை
பளிச்சென்று தெரியும்
வறண்ட அருவி
அதே வானம்
அதே நிலா
தினம் ஒரு காட்சி

இப்படி பல பூக்கள் இந்த பேருந்தில் உள்ளது நிச்சயம் இந்த பூக்கள் கொண்டாட வேண்டியவை பூஜிக்க வேண்டியவை.

இவ்வளவு ஆகச்சிறந்த படைப்பை கொடுத்த நம்ப கவிஞரின் பெயர்



ஸ்ரீவி. முத்துவேல்.

கவிஞர் விருதுநகர் மாவட்டத்தில் மாலையூரணிப்பட்டி எனும் செம்மண் பூமியில் உருவாகி மதுரை மாவட்டத்தில் தும்மலப்பட்டி எனும் கரிசல் பூமியில் பிறந்து மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே அமைந்திருக்கும் ஒத்தப்பட்டி எனும் நன்செய் பூமியில் வளர்ந்து சென்னை எனும் நெய்தல் பூமியில் வசித்து பணி செய்து தற்போது பணி உயர்வு பெற்று துபாய் தேசத்தில் வாழ்ந்து வருகிறார்.

இவருடைய வாழ்க்கை முதல் ஹைக்கூ சொல்லும் கிராமத்தில் வளர்ந்த இந்த கருவேல செடி தற்போது தேசம் கடந்து பண்பட்டு தமிழ் இலக்கியத்திற்க்கு ஆகச்சிறந்த பங்களிப்பை கொடுத்து வருகிறது.

எங்கு சென்றாலும் தமிழ் மீதும் எல்லா உயிர்கள் மீது கொண்ட காதலால் ஹைக்கூ கவிதை களாகவும் கதைகளாகவும் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

நல்ல பூக்களை சூடுவது நம் கடமை அல்லவா! மென்பொருள் பணி என்பது அந்த துறையில் வேலை

செய்பவர்களுக்கு தெரியும் எவ்வளவு மன உளைச்சல் வேலை என்று அந்த சூழ்நிலையிலும் இந்த சமூகத்திற்கு தன்னால் இயன்றதை செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்று படைப்புகளை படைத்துக் கொண்டு இருக்கிறார் அவரை நெஞ்சார பாராட்டுகிறேன் வாழ்த்துகிறேன்... இன்னும் பல படைப்புகள் வரும் என்று நம்புகிறேன்.

கவிஞருக்கு ஒரு பெயரை கொடுக்க விரும்புகிறேன் 'இயற்கைவாசி கிராமப் பேருந்தின் அட்டை படம் பார்த்தாலே வாசிக்க ஆசை வரும் அவ்வளவு நேர்தியாகயிருக்கிறது.

மொத்தத்தில் இந்த கிராமப் பேருந்தில் புளியம்பூக்கள்
அனைவர் கைகளிலும் பூக்க வேண்டியவை..

கவிஞரின் இரண்டாவது படைப்பு

“கொண்டைஊசி வளைவில் புதிய வானம்” என்ற ஜென் கதைகள் சமீபத்தில் வெளியாகி வாசகர்களிடத்தில் பரபரப்பாக பேசபட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது...

கவிஞருக்கு என்னுடைய பேரன்பும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

**- அ. சுந்தர செல்வன்**

*நூல்:*

## கிராமப் பேருந்தில் புளியம்பூக்கள்

*ஆசிரியர்:*
*ஸ்ரீவி. முத்துவேல்*
*பதிப்பகம்: அகநி*
*பக்கம்: 64*
*விலை: ரூ.70/-*

**நூலை வாங்குவதற்கு:**
**+91 94443 60421**



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.